செய்தி வெளியீடு எண் :2322 நாள் : 21.12.2022

**செய்தி வெளியீடு**

**"குறள் இனிது" – திருக்குறள் நாட்டிய நாடகம்**

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் அறிவிப்பான **தீராக் காதல் திருக்குறள்** என்ற திட்டத்தைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் செயல்படுத்தி வருகிறது. இதில் திருக்குறளின் சிறப்பை இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்லும் விதமாகப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிகழ்ச்சிகளில் ஒன்றாகத் திருக்குறளில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் நெறிகளைத் திருவள்ளுவரே நேரில் தோன்றி மாணவனுக்கு எடுத்தியம்பும் வகையில் சுதா சுவர்ணலட்சுமி குழுவினரின் "**குறள் இனிது**" என்ற திருக்குறள் நாட்டிய நாடகம் சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் இன்று (21.12.2022) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியினை மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் அவ்வை அருள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், இந்நாட்டிய நாடக நிகழ்ச்சியினைப் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக வருகை புரிந்து கண்டுகளித்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in